ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ் ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-1, இதழ்-2, சூன்-டிசம்பர் 2018

பெண் கருத்தியல்பில் சூழல் பெண்ணியம்

மா. பத்ம பிரியா

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
எஸ். எஃப். ஆர். மகளிர் கல்லூரி, சிவகாசி, தமிழ்நாடு, இந்தியா.

முன்னுரை

மண்ணையும் பெண்ணையும் ஆளுதல் என்பது ஆதிக்க மனோநிலை. பழங்காலம் முதல் நிகழ்காலம் வரை இந்நிலை தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது என்னும் முன்மொழிவை அடியொற்றியே சூழல்பெண்ணியம் குறித்த பெண்ணியவாதிகளின் கருத்தியல்புகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஆளுமை நிலைநாட்டலில் ஏற்படும் மோதலில் நலிவடைவது இயற்கை என்பது அறிந்தும் ஆணின் ஆளுமை இயற்கையின் நசிவைக் கண்டுகொள்வதே இல்லை என்பது சூழலியல் பெண்ணியவாதிகளின் வாதமாகும்.இயற்கையும் பெண்ணுடலும், இயற்கையின் சிதைவும் பெண்ணின் நசிவும் என்ற கருத்தியல்புகளில் கவிதையாக்கம் செய்கின்றனர்.நவீனத் தொழில்நுட்பம், போர்காரணமான புலம்பெயர்தல் போன்ற நிகழ்வுகள் பெண்ணியக்கவிஞர்களால் கவிதையாக்கம் பெறும்போது அவை சூழல்பெண்ணியமாக முகிழ்கின்றன என்பதே இக்கட்டுரையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



சூழல் பெண்ணியம் (Eco-Feminism)

பெண்கள் தமக்கான படைப்புத்தளத்தில் தம்மை மீட்க எழுதுகோல் எடுத்துள்ளனர். பெண்ணுடல் ஆணின் நுகர்வுப்பொருள் என்னும் இரண்டாம் பட்ச உணர்வு மேலீடுகளைப் புறந்தள்ளி எத்தனிக்கப் பெண்ணெழுத்துகள் முயன்றுள்ளது. பண்பாட்டில் பெண் என்பவள் தெய்வமாக, இயற்கையாகப் புனையப்பட்டாலும் அவை அனைத்தும் வெளிப்பூச்சு மட்டுமே. இயற்கையின் இயல்பினைப் பேணும் பெண்ணும் பரந்துகிடக்கும் மண்ணும் ஆதிக்க மேலாண்மையால் சிதைக்கப்படுகின்றன இதனை மீட்டெடுக்கவே சூழல்பெண்ணியம் செயலாற்றுகின்றது. ஆகையால் பெண்ணுடலை இயற்கைச்சூழலுடன் இணைத்து எழுச்சிமிகு கவிதைகளைப் பெண்ணியக்கவிஞர்கள் புனைந்துள்ளனர்.

எழுபதுகளின் இறுதியில் எண்பதுகளின் தொடக்கத்தில் தோற்றம் பெற்றது தான் சூழல்பெண்ணியம் ஆகும். **"சூழல் பெண்ணியம் என்ற சொல் முதன்முதலாய், பரான்காய்டி எபோன் (Franchise-D Enyboune) என்பவரால் எடுத்தாளப்பட்டது. அமெரிக்காவில் மெல்டவுன் (Melt down) என்ற மிகச்சிறிய தீவில் முதல் சூழல் பெண்ணிய மாநாடு நடைபெற்றது.இப்புவியில் பெண்களும் வாழ்வும் என்பது அம்மாநாட்டின் மையப்பொருளாகும்."** *(இரா. பிரேமா, பெண்ணியம் அகலமும் ஆழமும், பக்கம் 80)* மேலைநாட்டினரால் கருத்துருவாக்கம் பெற்ற கோட்பாடு என்பது ஆய்வுலகிற்கு வேண்டுமானால் புதிது. பண்டைய பெண்ணிலக்கியப் படைப்பாளிகளிடம் சூழல்பெண்ணியம் என்ற கருத்தாக்கம் அறிவிப்பு செய்யப்படாமலே சூழல்சார்ந்து பெண்ணுணர்வில் பேசப்பட்டுள்ளன என்பதை நாம் கவனத்தில் கொள்ளுதல் அவசியம்.

தொல்லியல் ஆய்வுகளும் சூழல்வயப்பட்ட பெண்களின் வரலாற்றைப் பதிவுசெய்துள்ளன. திராவிடப் பண்பாடான சிந்துவெளிப் பண்பாட்டில் கிடைக்கபெற்ற ஆதாரங்கள் இயற்கையின் மூலாதாரமாகப் பெண் இருந்தமையைப் பறைசாற்றுகின்றன. மண்ணும் நீரும் பெண்ணின் அடையாளமாக இருந்துள்ளன. சிந்துவெளிப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் 'பயிரினமே பெண்ணாக' கருக்கொண்டதை வெளிப்படுத்துகின்றன. **"இரண்டு புறமும் இரண்டு கொடிகள் வளர்ந்து நிற்க, அவற்றின் நடுவில் ஒரு பெண் கொடிகளைப் பற்றியபடி நிற்பதாக ஒரு முத்திரை ஹரப்பா, மொகஞ்சொதாராவில் கிடைத்துள்ளது. தலைகீழாக நிற்கும் ஒரு பெண்ணின் பிறப்பு உறுப்பிலிருந்து ஒரு செடி முளைத்து வருவதாக மற்றொரு முத்திரை. கருக்கொண்ட பெண்ணின் வயிற்றைப் போல பெருத்த வயிற்றுடன் பெண் உருவங்கள். இந்த முத்திரை எல்லாம் சிந்துவெளி மக்களிடம் நதி, நீர், செடி, கொடிகள், பயிர், பெண் தெய்வ வழிபாடுகள் ஆகியன இருந்து வந்ததைக் காட்டுகின்றன."** (முத்துமோகன், ந., இந்தியக்கதை ஏகம் அனேகம் சாதியம், **பக்கம்** 6). மறுஉற்பத்தி செய்யும் இயற்கையின் பல்லுயிரியத்திறம் பெண்ணுடலுடன் இணைத்துக் காணப்படும் உயர்நிலை போற்றுதலுக்குரியது; ஆய்வுக்குரியது.

"பெண்ணுடல் வளமையானது செழிப்பானது உயிரின உற்பத்தி ஆற்றல் நிறைந்தது என்ற தாய்வழிச் சமூகப் பண்பாட்டு விழுமியங்களை மீட்டுருவாக்கம் செய்வதின் மூலம்,பெண்ணடலை ஆணுடலிலிருந்து வேறுபடுத்திக்காட்டும் மாற்று மரபைப்


பெண்மொழிக்கவிதைகள் முன்னெடுத்திருக்கின்றன. பெண்ணுடலை எழுதுவதின் மூலம் பெண்ணுக்கும் இயற்கைக்குமான இயங்கியல் அமைவுகள் வெளிப்படுத்தப்படுகின்றன." *(மகாராசன், பெண்மொழி இயங்கியல், பக்கம் 352)* மேற்கண்டவாறு ஆய்வறிஞர் கூறிய கருத்தும் உற்று நோக்கத்தக்கது. இவையே நவீனப் பெண்கவிதைகளில் சூழல்பெண்ணியமாக ஊடாட்டம் பெற்றுள்ளன.



குறுஞ்செடிகள் மண்டிய மலையில்
பெருகுகிறது ஒருநதி
அதன் கரைகளில் வளைந்து
நீர்ப்பரப்பினைத் தொட்டோடுகின்றன.
பால்வழியும் மரத்தின் கிளைகள்
இஞ்சியின் சுவைகூடிய பழங்கள்
மெல்லிய தோல் பிரித்து
விதைகளை வெளித்தள்ளுகின்றன.
பாறைகளில் பள்ளம் பறித்தெஞ்சிய நீர்
முனைகளில் வழுக்கி விழுகிறது அருவியாய்.
.....
குளிர்ந்த இரவில் வெம்மை
தன்னைக் கரைத்துக் கொள்கிறது.
இறுதியில் இயற்கை
என் உடலாகிக் கிடக்கிறது.
(சுகிர்தராணி, இரவுமிருகம், பக்கம் 14)

சுகிர்தராணியின் கவிதையில் சூழலியலின் அடிநாதமான இயற்கையின் ஒப்பீடாகப் பெண்ணுடல் இனங்காணப்பட்டுள்ளது. பெண்ணுடல் என்னும் பெருநிலப்பரப்பு, இயற்கையாகப் பெண் என்னும் உருவகம் சூழலியல் பெண்ணியத்தின் வாதத்தினை பக்குவமாக முன்னெடுக்கின்றது.

நீரின் குணஇயல்புடன் பெண்ணுடலை இனங்கண்டுள்ளார் மாலதி மைத்ரி. பெண்ணுடலை இயற்கையுடன் இணைத்துப் புதுவிதி செய்துள்ளார்.



மழைத்துளிகளெனக் கண்களிரண்டும்
உருண்டு கொண்டிருக்கின்றன.
அருவியெனக் கூந்தல்
வழிந்து கொண்டிருக்கிறது
நதியென உடல்
வாழ்வைக் கடந்து கொண்டிருக்கிறது
கடலடைந்த கணத்தில்
எல்லையற்றதாகச் சுழல்கிறது
உடலுலகு.
*(மாலதி மைத்ரி, நீரின்றி அமையாது உலகு, **பக்கம்** 38)*

மாலதி மைத்ரி தமது கவிதைப் படைப்பு குறித்து இயற்கை சார்ந்த கருத்துகளையே பின்வருமாறு முன்வைத்துள்ளார். "**பெண் குருதி நீரால் ஒரு புது உயிரை உருவாக்கி கர்ப்ப நீரால் மிதக்க விடுகிறாள். அச் சிசு அவளிடமிருந்து பிரிந்தவுடன் முலைநீர் ஊட்டி அந்த உடலுக்கு உரமேற்றுகிறாள். இந்த அற்புதம் நீருக்கும் பெண்ணுக்கும் மட்டுமே உரியது. பெண்ணின் மன, உடல், உணர்வெழுச்சியும், அறிவெழுச்சியும் பருவமாற்றத்திற்கு ஏற்ப மழையாகவோ, அருவியாகவோ, காட்டாறாகவோ, நதியாகவோ, கடலாகவோ, குளமாகவோ மாறிவிடுகிறது.**" *(மாலதி மைத்ரி, விடுதலையை எழுதுதல், பக்கம் 135)* இவ்வாறு கூறும் பெண்கவிஞர் தம் படைப்பாக்கத்தில் இயற்கையும் பெண்ணும் என்ற கலப்பினை உறுதிசெய்கின்றார்.

புலம்பெயர்வும் சூழல்நலிவும்

புலம்பெயர்ந்தலின் இடர்பாடுகளைப் பெண்ணியக்கவிஞர்கள் பதிவுசெய்யும் பாக்களில் இயற்கையின் நலிவும் இணைத்தே காட்டப்படுகின்றது. ஆதிக்க வர்க்கத்திடம் முரண்படும் பெண்ணியவாதிகள் 'ஆண்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வியலைப் பற்றி எண்ணிப் பார்ப்பதில்லை, இயற்கைக்கு எதிராகவே செயல்பட்டுவருகின்றனர். இயற்கையை ஆளவேண்டும் என்பதே அவர்கள் எண்ணமும் செயல்பாடும்' ஆகும் என்றே சுட்டிக்காட்டுகின்றனர்.


சங்கப்பாவில் பாரிமகளிர் பாடிய பாடல் தந்தை இழப்பின் ஊடாகப் புலம்பெயர்ந்த வலியைக் கூறுகின்றது. புலம்பெயர்தலில் குறிப்பாக அதிகார வர்க்கம் இயற்கையை ஆளுகை செய்யும் நிலைப்பாட்டினையும் உறுதிசெய்கின்றது.

அற்றைத்திங்கள் அவ்வெண்ணிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத்திங்கள் இவ்வெண்ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும்கொண்டார் யாம் எந்தையுமிலமே *(புறநானூறு, 112)*

மேற்கண்ட கவிதையின் வலி, வடு இன்றைய ஈழத்துப் புலம்பெயர் கவிதைகளில் தொனிக்கின்றது. நவஜோதி ஜோகரட்னம் போரில் அழிந்து பட்ட இயற்கையின் அழிவுக்காக வருந்துகின்றார்.

இங்கே
செயற்கையாய் செய்து வைத்த
மலர்களின் வண்ணத்துள்
நசிந்து கொண்டிருக்கும் சுவாசநாளங்கள்
……..
நான் பிறந்து அளைந்த மண்
மாடு வண்டி தள்ளிய மண்
என் மக்களுக்கு
உணவு கொடுத்த மண்
கை கால் சிவந்து
கலப்பை உழுத மண்
……..
பசுக்களும் ஆடுகளும்
பாடி மேய்ந்த மண்
துப்பாக்கி இல்லாது
சூரியன் சுட்டுக் கொதித்த மண்
……..
இலையுதிர் காலத்து
ஈசல் பூச்சிகளாய்
உணர்ச்சிகள் உள்ளடங்கியபடி
உதிரக் கசிவுகளில்
…….. *(நவஜோதி ஜோகரட்னம், நெருடும் நினைவுகள், **பக்கம்** 35)*

பூர்வீக மண்ணிலிருந்து துரத்தியடிக்கப்பட்ட அவலத்தில், உணர்ச்சிகள் உள்ளடங்கியபடி, கலப்பை உழுத மண்ணை விட்டுப் புலம்பெயர்ந்த சோகம் பேசப்படும் சூழல் நோக்கத்தக்கது.



எத்தனை வம்சங்கள்
வேர்கொண்ட மண்
அத்தனை தலைமுறையின்
தலைவிதியும்
துப்பாக்கிகளின் நிர்பந்தத்தில்
தலைகீழாயிற்று
……..
அந்த நிலத்தின் மீது தான்
எங்கள் உயிரை வைத்திருந்தோம்
……..
*(அ. மங்கை, பெயல் மணக்கும் பொழுது, **பக்கம்** 20)*

பல்லாண்டாக ஒரே மண்ணில் வாழ்ந்த தலைமுறையின் தலைவிதியும் மாற்றி எழுதப்பட்ட தன்மையை மங்கை கூறியுள்ளார். அவர் கவிதை, போர் வன்முறையால் மண்ணும் பெண்ணும் ஒருசேரப் பாதிக்கப்படுதலை ஐயமற விளக்குகின்றது. ஆதலால் பெண்ணியவாதிகள் போர் வன்முறைகள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு எதிராகக் குரல் ஒலித்து வருகின்றனர். மேலும், அணுஆயுதப் போரையும் கடுமையாக எதிர்க்கின்றனர். அவர்கள், ஆண்களின் வன்முறைகளில் ஒருவகையான போக்குத் தான் அணுஆயுதத் தொழில்நுட்பம் என்கின்றனர். சூழல்பெண்ணியவாதிகள், இன்றைய நுகர்வுப் போக்கு வாழ்க்கை (Consumerist life style) என்பது

இயற்கைக்கு எதிரானது என்றே கருத்துரைக்கின்றனர். சூழலியல், அமைதி, உடல்நலம் என்பனவே இவர்களின் அரசியல் கோட்பாடாகும். உயிர் தொழில்நுட்பம், மரபணு பொறியியல் மற்றும் மறுஉற்பத்தித் தொழில்நுட்பம் என்பவை இயற்கைக்கு எதிரானவை என்று கூறும் சூழல் பெண்ணியவாதிகள் மக்களிடையே சூழல்விழிப்புணர்வுக்கான மாநாடுகளை நடத்தியுள்ளனர். 1985 இல் சுவிடனிலும், 1988இல் பங்களாதேசிலும், 1991இல் பிரேஸிலிலும் நடத்திய மாநாடுகளில் இயற்கைநலனும் பெண்நலனும் பேசப்பட்டன.

எனது மண்ணில்
நிச்சயமற்றுப் போய்விட்ட
எனது இருப்பை
உறுதிப்படுத்த
பிறந்த மண்ணின் எல்லையைக் கடந்தேன்
……
செம்மண்ணும் போயிற்று
எம்மண்ணும் போயிற்று *(அ.மங்கை, பெயல் மணக்கும் பொழுது, **பக்கம்** 67)*

நிச்சயமற்ற எனது இருப்பு என்ற வேதனையின் உள்ளீடாக மண்ணை ஆளும் ஆதிக்க மேலாண்மையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

நிறைவுரை

சூழல்பெண்ணியவாதிகள் இயற்கையின் நலனை மீட்டெடுக்கவே செயலாற்றுகின்றனர். பெண்ணியக் கவிதைகளின் மாற்றுத் தளமான சூழலியல் பெண்ணியம் ஆதிக்கம்/ பணிவு என்ற இணைமுரணைக் கட்டவிழ்க்க முனைந்து, இயற்கையை ஆளுகை செய்யும் அதிகாரப்போக்கை வேரறுக்கப் போராடுகின்றது. பெண்ணியவாதிகள் பாலியல் வன்கொடுமைகளை இயற்கையின் நலிவுடன் சுட்டிக்காட்டி எழுச்சிமிகு விழிப்புணர்வுப் பாக்களை முன்னெடுக்கின்றனர்.

ECOFEMINISM

M. Padma priya

The term Ecofeminism emerged with the strong belief that women have been always dominated and controlled by men ever since the ages. Due to the impact of modern technological advancements and migrations due to wars, the Tamil poets manage to write poems on Ecofeminism. Though women are worshipped and praised as Goddess and Nature it is all seen as outward gimmicks. When the earth and women are dominated and destroyed by men, Ecofeminism emerged to protect both. It emerged as a concept in the late 80s and early 90s and it was first used by Franchise-D, Enyboune. In USA, the first Ecofeminist Conference was held in an island called 'Melt Down' with the theme 'Women and Life'. Though this new term came very late in the west, even in the ancient times many feminist writers in Tamil have raised their voices for issues related to ecofeminism. Sugirtharani has compared the woman's physic to the nature's landscape and at large it come to refer the greater landscape of Nature as basically a feminine one. Mythri has compared women to water and relates it to nature in general. While feminist writers talk about women suffrage they also talk about how men have always destroyed nature. Even they consider the harmful nuclear technology and consumerist culture are examples of the violent activities of men only. Ecology, peace and health are the primary political concerns of such ecofeminists. They consider Biotechnology, Genetic Engineering and Recycling as harmful concepts against nature and they have been conducting many conferences to create awareness. These ecofeminists have been struggling to restore Nature to its pure form. Ecofeminism emerged from Feminism as an alternate platform which revolves around the ironic combination of power and submission and it aims at preserving nature.